Registered as a News Paper in Ceylon
P. M. G. No. H. A. 59/300 of 1953.

# இந்து சாதனம்

விரோதி ஹு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது

வெள்ளி தோறும் வெளிவருவது — தனிப்பிரதி: சதம் 10.

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

[புத் - சூஅ] யாழ்ப்பாணம்:- துன்முகி ஹூ சித்திரை மீ கருஉ வெள்ளிக்கிழமை (27 APRIL. 1956) [இல - ௬]

அரசியல் அலை

## மூன்ருவது பாராளுமன்றத்திலே மொழித் துரோகம்!

---------:o:---------

### தேசியப் போர்வை! சிங்களத்திற் பேச்சு!!

### தமிழ் பேசும் மக்களுக்கு தானங்கள் எதற்கு?

——0——

மக்களின் மாபெரும் வெற்றி என்று பறைசாற்றிப் பாராளு மன்றத்துட் புகுந்த மக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கததின சனநாயக மனப்பான்மை ஆரம்பத்திலேயே அம்பலமாகி விட்டது.

வியாழக்கிழமை முதன் முதலாகக் கூடியபொழுது புதுப் பாராளுமன்றத்தைப் பொதுசனங்கள் பெருமிதமாய் வரவேற்ருர்களாம். தலைமை வகிப்பதற்குத் தமிழ்பேசும் அங்கத்தவர்கள் பலம் குன்றவும் அரசாங்கக் கட்சியின் ஆதிக்கம் பாதிக்கப்படாதிருக்கவும் உதவி புரியக்கூடிய வகையிற் புத்தளத்தொகுதியிற் 'சிங்களம் தமிழ் சம உரிமைக்' கொள்கையிற் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஜனப் H. S. இசுமெயில் அவர்கள் தெரிவு செய்யப்பட்டமை ஒரு பெருஞ் சம்பவம்.

சிங்காசனப் பிரசங்கஞ் செய்த மகாதேசாதிபதி அவர்கள் சிங்களத்திற் பேசி அரசியற் சட்ட அமைப்பைத் தாக்காது பாதுகாக்க ஆங்கிலேயத்திற் பேசியது இன்னெரு சம்பவம்.

அந்தச் சிங்காசன அறிவிப்பிலே பூலோகத்திலே இந்திர போகம் அமையக் கூடிய வகையில் அரசாங்கம் நடைபெறப் போவதற் காயத்தங்கள் உள்ளன என்று அரிசி சீனி முதலியவற்றின் விலை குறைக்கப்படுதலைக் குறிப்பிட்ட மாதேசாதிபதியவர்கள் சிங்களமே அரச மொழியாகும் என்பதையும் குறிப்பிட்டார். இதைக் கேட்டுக்கொண்டிருக்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தார்கள் பத்தோன்பது தமிழ் பேசும் அங்கத்தவர்கள்.

இந்த மின்னல் தோன்றி மறைந்த பின்பு இடியும் முழங்கியது.

உணவு மந்திரியா ரென்ருல் உணர்ச்சி மிக்க தனிச் சிங்களவாதி. செம்படைக் கட்சிக் கொள்கைக்காகச் சீவிய காலத்தைச் செலவு செய்யத் தீர்மானித்திருக்கும் ஒரு தீவிரவாதி. கேள்விக்குப் பதில் அளிக்கும் பொழுது சிங்களத்திற் பேசினர். முதலியார் காரியப்பர் அவர்கள் மொழி பெயர்ப்பொன்றைக் கேட்டார். முடியாதென்ருர் மந்திரியார். பாராளுமன்ற அன்றைய கூட்டமும் முடிந்தது.

சபைத் தலைவர் தெரிவிலே மகிழ்ச்சி காட்டிப் பேசிய திருவாளர்கள் செல்வநாயகம் சுந்தரலிங்கம் அவர்களும் தலைவரைக் கண்டு முறையிட வேண்டி நிகழ்ந்தது.

திரு. பொன்னம்பலம் அவர்களும் உணவு மந்திரியார் பொறுப்பற்ற வகையில் மொழி பெயர்ப்புக் கொடுக்க மறுத்ததைப் பற்றிச் சபைத் தலைவருடன் ஆட்சேபித் திருக்கின்ருர்.

**முதற் கோணல் முற்றுங் கோணலா......?**

## புதிய மந்திரி சபையும் உபமந்திரிகளும்

ஸ்ரீ எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக முதல் மந்திரி ஆயினர். அவர் பின்வருவோரை மந்திரிகளாகத் தெரிவு செய்திருக்கின்ருர்.

ஸ்ரீமான்கள் எம். டபிள்யு. எச். டி. சில்வா நீதி, ஸ்ரான்லி டி. சொயிசா நிதி, பி. எச். டபிள்யு. டி. சில்வா கைத்தொழில், ரி. பி. இலங்கரத்ன வீடமைப்பு சமூக சேவை, எம். சேனநாயக பகிரங்கவேலை புகையிரதம், சி. பி. டி. சில்வா காணி, காணி அபிவிருத்தி, டபிள்யு. தகநாயக கல்வி, பிலிப் குணவார்தன கமத்தொழில் உணவு. ஏ. பி, ஜயசூரிய உள்நாடு, ஸ்ரீமதி விமல விஜயவார்தன சுகாதாரம், ஸ்ரீ ஜே. குறுப்பு உள்நாட்டரசாங்கம் சுகாதாரம், ஸ்ரீமான்கள் சி. ஏ. எஸ். மரைக்காயர் தபால் வானொலி, ஆர். ஜி. சேனநாயக வர்த்தகம்.

மாதேசாதிபதி உதவி மந்திரிகளையும்நியமித்துள்ளார் அவர்களின் விபரம் வருமாறு:

திரு ஐ, ஆர். பி, குணத்திலக காலுகல்ல சுகாதாரம், திரு. டபிள்யு. ஜே. சாலஸ் முனசிங்க (கடற்ருெழில்; கைத்தொழில் திரு. லக்ஸ்மன் இராஜபக்ஸ வர்த்தகம், திரு. கே எம் பி. இராஜரத்ன தபால், வானொலி, தகவல் திரு. திக்கிரிபண்டா சுட சிங்கா பாதுகாப்பு வெளிநாட்டு விவகாரங்கள், திரு பியசேன தென்ன கோன் நீதி, திரு. பி. பி அலூவியஸ் வீரக்கோன் கல்வி.

### தண்ணீருக்கும் விலை

மழையின்மையால் மன்ஞரிலே தண்ணீர்ப் பஞ்சமிருந்துவிட்டதாம். இ லூற் குடிக்கும் தண்ணீ ஒரு வாளி இருபத்தைசத வரையில் கொடுத்து வா குகின்ருர்களாம்.

## திருக்குறளிலே தேர்வு

—0—0—

## சித்தியெய்தியோர் விபரம்

மேற்பிரிவு: அ. அருளப்பு இறக்குவாணை, க. த. ஞானப்பிரகாசம் நெடுந்தீவு.

மத்திய பிரிவு: செ மனோன்மணி அருணோதயக் கல்லூரி அளவெட்டி, க ஜெயலட்சுமி சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பிழை, சி. தங்கம்மா சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பழை, மு. புஷ்பமலர் சைவப்பிரகாச வித்தியாசாலை தெல்லிப்பழை, கு மனோன்மணி சதானந்த வித்தியாசாலை அளவெட்டி, க. தவமணி அருணோதயக் கல்லூரி அளவெட்டி, க. தியாகராசா யாழ்நகர்க் கல்லூரி காரைநகர், சு. தனேஸ்வரி யாழ்நகர்க்கல்லூரி காரைநகர், செ. செல்லத்துரை மீசாலை, மு. தில்லைநாதன் சங்கானை, நா. தெய்வநாயகி அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி, சோ. பொன்னம்மா அத்தியார் இந்துக்கல்லூரி நீர்வேலி, சு. பரமேசுவரி அ. த க. பாடசாலை K பன்னிலை: இ. மலையாளி, அ த க பாடசாலை, K பன்னிலை; எம் எச் சுவறிய உம்மா அ த க பாடசாலை, K பன்னிலை; இ.பாட்பு அ த க பாடசாலை, K பன்னிலை, மு கா செயிறு சுபியா, அ. த க. பாடசாலை, K பன்னிலை, கா. யோகேஸ்வரி அ த க பாடசாலை, K பன்னிலை த மகேஸ்வரி அ த க பாடசாலை, K பன்னிலை சு யோகேசப்பு ஞே க பாடசாலை நெடுந்தீவு, ச சிவபாக்கியம் யார்க்கரு விநாயக வித்தியாசாலை கரவெட்டி, அ சீதா லெட்சுமி விவேகானந்த வித்தியாலயம் கொழும்பு

கீழ்ப்பிரிவு: த. சச்சிதானந்தன் காரைநகர் (கி மா) பொ. சரோஜினிதேவி வேலணை, வ மகேசி இளவாலை, மு. மனோரஞ்சிதம இந்துக்கல்லூரி சாவகச்சேரி, வெ சரசுவதி வ மே மெ இளவாலை, வே சிவசுப்பிரமணியம இந்துக்கல்லூரி சாவகச்சேரி, இ மகாலட்சுமி ஸ்ரான்லி அ கலாசாலை யாழ்ப்பாணம் இ சி கிருஷ்ணசாமி இந்துக் கல்லூரி சாவகச்சேரி, வை கமலேசுவரி இந்துக்கல்லூரி சாவகச்சேரி நா சுசீலா அருணோதயக்கல்லூரி அளவெட்டி கு லீலாவதி மெய்கண்டான் பாடசாலை டண்ணுகம் இ சோமசுந்தரம் இந்துக் கல்லூரி சாவகச்சேரி க லோகேஸ்வரி, யாழ்நகர்க் கல்லூரி காரைநகர், கா. புவனேஸ்வரி அ த க பாடசாலை K பன்னிலை ஞா சிவயோகம் இந்துக்கல்லூரி சாவகச்சேரி அ ஜானகி அமிர்தாம்பிகை வித்தியாசாலை நுணுவில் வே இராசரத்தினம இந்துக் கல்லூரி சாவகச்சேரி, மு உமையம்மா இந்துக்கல்லூரி சாவகச்சேரி வை பரமேஸ்வரன் யாழ்நகர்க் கல்லூரி காரைநகர், மு ஆரியமாமா சைவப்பிரகாசவித்தியாசாலை நா பழனிததுரை நீர்வேலி, சு மோகனசுந்தரம் பண்டாரவளை வி ஆறுமுகம் சாவகச்சேரி க பரமேஸ்வரி ஸ்ரான்லி அ கலாசாலை யாழ்ப்பாணம், ச வசந்தாதேவி சாவகச்சேரி சைவி இ வேதநாயக கொழும்பு 13; ந. தேவிக ராணி, சதானந்த வித்திய சாலை அளவெட்டி வி ம கையர்க்கரசு சதானந்த வி தியாசாலை அளவெட்டி மங்களேஸ்வரி அளவெட் இ சண்முகநாதன் காரைந த நேசமலர் அளவெட்டி த நிசார அ த க பாடசா K பன்னிலை; ச சோதிநாய சாவகச்சேரி ந சாரதாதே தெ வ மே மெ இளவாலை வீரலட்சுமி வேலணை சி சி கம்மா சைவப்பிரகாச வ தியாசாலை தெல்லிப்பல பீ ஞானசந்திரன் மட்டுவ தா மீனாம்பிகை கெஸ்கா கண்டி க தவமணி ஸ்ரான் அ கலாசாலை யாழ்ப்பாண தி தேவகி சுண்டிக்குளி ளிர் கல்லூரி செ சரசு

(தொடர்ச்சி 6-ம் பக்கம்)



திருச்சிற்றம்பலம்.

வாழ்கஅந்தணர்வானவர்ஆனினம்
வீழ்கதண்புனல் வேந்தனுமோங்[குக
ஆழ்க தீயதெல்லாம்அர னாமமே
சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்.

# இந்துசாதனம்

யாழ். துர்முகிஸு சித்திரை மீ கரு உ வெள்ளிக்கிழமை

## வகுப்பு ஆட்சி வந்துவிட்டதா......?

மாற்றம் வந்துவிட்டதென்று மக்கள் மனமகிழ்ச்சி அடைந்திருக்கின்றார்களாம். ஆனல் மக்கள் ...ன்று சொல்லுமிடத்து இலங்கை வாழ் மக்கள் அனைவரும் அவ்வாறு அகமலர்ச்சி கொண்டிருக்கின்றார்களா என்பதுதான் ஆராயப்பட வேண்டியதான்று.

அரசாங்க சபைக் காலத்...ல் சேர். D. B. ஜயதிலக...ன் தலைமையிலே ஒரு ...ர்வ சிங்கள மந்திரிசபை ...ட்சி புரிந்து வந்ததை ...வருமறிவர். ஆனல் அப்...பாழுது அரசினரால் நிய...னஞ் செய்யப்பெற்ற ...ன்று மந்திரிகளும் தேசா...பதியவர்களின் மேற்பார்...வையும் இருந்தமையால் ...லைமை அவ்வளவு சீர்...லயவில்லை. இன்றோ உல... எங்கும் இலங்கையில் ...கள் ஆட்சியென்றதே ...க்சு. உண்மையில் இங்...ட்டிலே ஒன்பதில் ஏழு ...காணங்களிலுள்ள மக்க...ன் ஆட்சியே நடைபெ...கின்றதுஎன்பதை இதர ...ச அமைச்சர்கள் அறி...கிருக்கின்றனர். இது ...கள் ஆட்சியா? வகுப்பு ...ட்சியா என்பதை அர...ல் வாதிகள் ஆராய்ந்து ...க்கின் நன்கறிவார்கள். ...ங்கியதேசியக் கட்சி ...நாயகமுறைக்கு முரண் ...ான வகையில் நடந்து ...ண்டபடியால் ஆதிக்...ம் இழந்துவிட்டது ண்...யே எனினும் ஐ. தே. ...சியிலே பெயரளவிலே ஒருதேசியப்போர்வை ...னப்பட்டதை யாரும் ...க்கமாட்டார்கள். அவ்...வின்றி இந்தத் தேர்த...காக உருவான மக் ... ஐக்கிய முன்னணி ... தமிழ்பேசும் மக்கள் ...ம்பான்மையாகவுள்ள ...குதிகளின் அங்கத்...கள் ஒருவருமில்லை ...ன்பதை உலகஅரசியல் ...கள் உணர்வார்களே ...ல் ஈழத்தில் இப்...ழுது அரசு நடத்தும் ...யை மக்களின் கட்சி ...று ஒப்புக்கொள்வார் ...?

...சிக்கு அலங்காரமாக ... மனத்தை இழுக்கும் ...ண்ம் தேசிய உணர்ச் ... உண்டுபண்ணும் ...யிலும் பெயரிட்டுவிட்டாற்போதுமென்று நினைக்கின்றவர்களிடம் பொறுப்புணர்ச்சியிருக்குமா? அந்த வகையிலே ஐ. தே. கட்சியை அகற்றி ஆதிக்கத்தைப் பெறுவதற்கு சில கட்சியினர் ஒருங்கு சேர்ந்து உருவாக்கிய முன்னணி மக்களின் கட்சியாயிருக்குமா? பழைய சமசமாசக்கட்சியினரின் கொள்கையோ பலாத்காரத்தை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சிங்களத்தீவு என்ற இலட்சியத்தையுடையது. விடுதலைக் கட்சியினர் புத்த மதத்தையும் சிங்கள மொழியையும் அரசவரிசையில் அமைக்கத் திட்டமிட்டவர்கள். இவர்களும் இதரகட்சியினரும் சேர்ந்து எழுந்த முன்னணி, ஈழத்தின் தேசநலத்துக்காகஉழைக்கும் என்று சொன்னல் யார் நம்புவார்கள்?

மூன்ருவது பாராளுமன்ற முதலாவது கூட்டத்தில் இரண்டாம் நாள் நிகழ்ச்சி நேரத்தில் உணவு மந்திரியார் மக்கள் ஐக்கிய முன்னணியின் உள்ளக் கிடக்கையை வெளியாக்கிவிட்ட வகையில் மனிதப் பண்பாட்டுக்கும் அரசியல் அமைப்புக்கும் நெறிமுறைக்கும் நேர்விரோதமாக நடந்து கொண்டனர் என்பதைப்பற்றி எழுதுவதாற் பயனிருக்கமாட்டாதென்றே நினைக்கின்றோம். மக்களாலே தெரிவுசெய்யப் பெற்ற அங்கத்தவர்களிற் பலர் அறிந்துகொள்ள முடியாத மொழியிலே பொறுப்பு வாய்ந்த மந்திரியார் சொற்பொழிவாற்றுவது சனநாயக முறையாகுமா? அவ்வாறு தாய்மொழியுணர்ச்சி வீறுகொண்டொருவர் பேசினும் அப்பேச்சை ஏனையோர் அறியும் வண்ணம் மொழிபெயர்த்துதவ மறுத்தல் மனிதப் பண்பாடாகுமா? இதுதான் மக்கள் முன்னணியின் இலக்கணம்! மக்கள் ஆட்சியின் மகிமை!!

பல்குழுவும் பாழ்செய்யு
முட்பகையும் வேந்தலைக்குங்
கொல்குறும்பு மில்லது நாடு—

x x x

### சொற்பொழிந்தது போதும்!

—

இதுவரை சொல்லளவில் இருந்த அரசியல் நெருக்கடி இப்பொழுது தமிழ் பேசும் மக்களுக்கு நேராக நிச்சயமாகத் தோன்றி யிருக்கின்றதை இன்னமும் சிலர் உணர்ந்திலர் என்று நாம் நினைந்து மனம் வருந்துகின்றோம் என்னை? கவலைக்கிடமான கலக்கத்தைவிளைவிக்கும்இந்த நிலையிலே பொழுதுபோக்கு முறையிலே சொற்பெருக்காற்றுவதைத் தேசத்தொண்டாகச் சிலர் கருதி அவ்வழி நின்று பணியாற்றுகின்றமையினுல்.

அரசாங்கத் தனிமொழியாகச் சிங்களம் அரியாசனம் அமர்ந்துவிடுவதற்காகும் வழிவகைகளை மக்கள் ஐக்கிய முன்னணிப் பாராளுமன்ற அங்கத்தவர்கள் தொடர்ந்து செய்து வருகின்ற வேலையில் அவ்விதமான அரசியல் அநீதியைத் தடுப்பதற்குத் தமிழகத் தலைவர்கள் ஒன்றுகூடி செயற்றிட்டமொன்றை வகுக்க வேண்டியது அத்தியாவசியமான கடமையாயிருக்கவும் அன்னார் தனித்தனியே தங்கள் எண்ணங்களை மனப்போனவாறு வெளியிடுவது பொருத்தமாகாது; ஒரு பயனுமளிக்க மாட்டாது.

பாராளுமன்றத்திலே இப்பொழுதுள்ள அங்கத்தவர்களின் கொள்கை மனப்பான்மையைக் கூர்ந்து பார்க்குமிடத்து தமிழக அங்கத்தவர்களுக்கு சபைத தலைமையோ எதிர்க் கட்சி முதன்மையோ எவ்வகையிலும் அதிகாரத்தை உதவமாட்டா என்பது எளிதில் விளங்கும். அன்றியும் மக்கள் ஐக்கிய முன்னணியின் அரசாங்க நோக்கங்களை அடிப்படையாகக் கொண்ட அரியாசனப் பேச்சுக்கு நன்றி கூறுமுகமாக எழும் விவாதத்தின் பொழுது தமிழக அங்கத்தவர்கள் ஒருங்கு கூடி ஒருமுகமாக மறுப்புரை கூற வேண்டுமேயன்றித் தனிப்பட்ட முறையிலே அங்கத்தவர்கள் ஆட்சேபனைகளை எடுத்துக் காட்டுவது அழகாகாது, பொருத்தமும் ஆகாது என்பதை நாம் தமிழ்பேசும் அங்கத்தவர்களுக்கு மீண்டும் நினைவூட்டுகின்றோம். செயலாற்றவேண்டிய பேராபத்துக் காலத்திலே தெளிந்த சிந்தையுடன் திடசித்தமாகச் செயற்பாலனவற்றைப் பயனில் சொற்பேசாது கருமமே கண்ணாயிருந்து செய்தலையே தலைவர்களிடம் தமிழக மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதை மட்டும் நாம் இங்கு எடுத்துக்காட்டவிரும்புகின்றோம்.

# பத்திரிகை மகாநாட்டிற் பிரதமர்

## முக்கியமான கேள்விகள்: முதன் மந்திரியின் முடிபான எண்ணம்

### சிங்களமே அரசமொழி; திட்டவட்டமான பேச்சு!

இலங்கையில் சமஷ்டி அரசாங்கத்தை ஏற்படுத்த ஒருபோதும் தாம் சம்மதிக்க முடியாதென்றும், மத்தியில் சமஷ்டி அரசாங்கத்தை ஏற்படுத்துவது பொதுவாக நாட்டுக்கோ அல்லது சமஷ்டி அரசியலைக் கேட்கும் தமிழர்களுக்கோ இருவருக்குமே நல்லதில்லையென்றும் பிரதம மந்திரி மேலும் சொன்னர்.

பிரதம மந்திரி கூட்டிய முதலாவது பத்திரிகை நிருபர்கள் மகாநாட்டில் அரசாங்கம் என்ன செய்கிறது? என்ன செய்ய உத்தேசித்திருக்கிறது? என்பதைப் பொது ஜனங்களுக்கு அவ்வப்போது அறிவிக்க இதுமாதிரி நிருபர்கள் மகாநாட்டை அடிக்கடி தாம் கூட்ட உத்தேசித்திருப்பதாயும் சாத்தியமானல் வாரந்தோறும் பத்திரிகை நிருபர்களுக்குப் பேட்டி அளித்துப் பேசத் தாம் உத்தேசித்திருப்பதாகவும் பிரதம மந்திரி சொன்னர்.

பாஷைப் பிணக்கைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் பின்வருமாறு தெரிவித்தார்.

சிங்களத்தை ஒரு இராசாங்க மொழியாக்க அரசாங்கம் விரைவில் நடவடிக்கை எடுக்குமென்று சிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அர்த்தம் சிங்களம ஒன்றை மட்டுமே இராஜாங்க மொழியாக்க நாங்கள் தீர்மானித்திருக்கிறோம் என்பதேயாகும். இதற்கு அவசியமான சட்டம் ஒன்று இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகிறது. ஓரிரண்டு தினங்களுக்குள் இது தயாரித்து முடிக்கப்பட்டுவிடும்.

அந்தச் சட்டத்தில் எல்லாவற்றையும் சிங்களத்தில் மாற்றுவதின் முன்னல் இடைக்காலத்தில் என்ன ஏற்பாடு செய்யப்படுமென்பதும் தமிழ் மொழியைப் போன்ற முக்கியமானமொழி நிர்வாகத்தில் எந்த அளவிற்கு உபயோகிக்கப்படுமெனவும் குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்தச் சட்டம் பாராளுமன்றத்தில் சாதாரண அதிகப்படியான வாக்குகளால் நிறைவேற்றியதும சட்டமாக்கப்பட்டு நடைமுறையிற் கொண்டு வரப்பட்டுவிடும்.

#### தவருன பல எண்ணங்கள்

இதுமாதிரியான சட்டம் அரசியல் திட்டத் திருத்தமாகத்தான் கொண்டுவரப்படவேண்டுமென்றும் அதற்குச் சபையில் மூன்றில் இரண்டு பங்கு கூடிய ஆதரவிருக்க வேண்டுமென்றும் சிலர் தவருன அபிப்பிராயம் கொண்டிருக்கிருர்கள். சிங்களத்தை அரசாங்க பாஷையாக்க அரசியல் திட்டத்தைத் திருத்தவேண்டிய அவசியமேயில்லை. சாதாரண அதிகப்படியான வாக்குடன் ஒரு சட்டத்தை நிறைவேற்றினலே போதுமானது.

சாதாரண அதிகப்படியானவாக்குடன நிறைவேற்றும் இந்த சட்டத்தைப்பிறகு ஒருசமயம் சாதாரண அதிகப்படியான வாக்கைக் கொண்டே நிராகரித்துவிடலாம் என்று சுட்டிக்காட்டப்படுகிறது. இந்த ஆபத்து எல்லாச் சட்டங்களுக்குந்தான் இருக்கிறது. சாதாரண அதிகப்படியான வாக்கைக் கொண்டு

தொடர்ச்சி 5ம் பக்கம்

## வாழ்க்கை வானில்

— வளர்மதி

### புது அரசாங்கத்தின் புதுமை......!

#### கொத்தலாவலை முத்திரைக்கு ஆபத்து?

● முத்திரை விலையிற் கை வைக்க எண்ணிய பண்டாரநாயக அரசாங்கம் முன்னுள் முதல் அமைச்சராயிருந்தவர் புறங் காட்ட முன் வெளியிட்ட 'கொத்தலாவலை' முத்திரையை அகற்றிவிடத் திட்டமிட்டிருக்கின்றதாம். ஆதிக்கங் கைப்பற்றப்பட்டாலும் பழைய ஆளின் உருவமே அரசாங்கத்திற் காணப்படாதிருக்கவேண்டுமென்ற மனப்பான்மை தோன்றிவிட்டது!

#### ஐயாயிரம் ஆசிரியர்கள் என்பது மெய்யா?

● வந்தார் மந்திரி தகநாயக. முன் உபாத்தியாயராயிருந்தவரல்லவா. உடனடியாக ஆசிரியர்களுக்கு ஆவனசெய்யப் புறப்பட்டவர் அந்தச் 'சிங்களமே' அரசமொழி என்ற வியாதியாற் பீடிக்கப்பட்ட நிலையிற் சிங்களம் பேசும் ஆசிரியர்களுக்கே இடந்தேடவழி தேடியிருக்கின்ருர் என்ருல் இது நூதனமன்று! ஒன்றல்ல — நூறல்ல — இருநூறல்ல — ஆயிரமல்ல — ஐயாயிரம்! — ஐந்து ஆயிரம்!!

#### தூக்குத் தண்டனையிலுமா?

● அரசியல் மாற்றத்தின் போது குற்றப்படுகின்றவர்களல்லவா பாக்கியசாலிகள். பாச்சோவுக்கு பல்லாண்டு கூறியவர்களின் முயற்சி பலித்துவிட்டதென்றே சொல்லலாம். மூன்றுவருட காலத்துக்கு பாச்சோ போன்றவர்கள் மூச்சுவிட உதவி செய்த மக்கள் ஐக்கிய முன்னணி நீடு வாழ்க என்று அவர்கள்வாழ்த்துகின்றாராம்.

#### அரசாங்கச் சட்டங்களுக்கும் விடுதலையா?

● அரசாங்க ஒழுங்குகளுக்கு மாருக நடந்தவர்கள் என்று முன்பு குற்றஞ்சாட்டப்பட்டுத் தண்டனை யிடப்பட்டவர்களுக்கும் புத்துயிர் அளிக்கப் போகின்ருர்களாம். முன் தூக்கிவிடப்பட்டவர்களையும் உயிர்த் தெழச் செய்

(தொடர்ச்சி 5-ம் பக்கம்)

# சொல்லும் செயலும் தொடர்ந்திருப்பதே தமிழ்ப்பண்பாடு

## இனத்துக்கும் மொழிக்குமாக எழுந்து பணிபுரியும் மனநிலை வேண்டும்

தமிழர்களுடன் தமிழ் மொழியும், தமிழர் சமயமும் இன்று நேற்றுத் தோன்றியவைகளல்ல. இடையிட்டு வந்தவைகளுமல்ல. ஆதியானவை. கல்தோன்றி மண் தோன்றாக் காலத்து முன்தோற்றியவை. தமிழ்மொழி பழமையானது. தமிழினம் பழமையானது என்றுந் தலை நிமிர்ந்து நிலவும்பேறு பெற்றது. எத்தனை இன்னல்கள்தான் இவற்றைத் தாக்கியவை. ஒன்றிரண்டல்ல பலப்பல. தமிழர்களாகப் பிறந்து தமிழ்நாட்டிற் பிறந்து தமிழ்ப் பண்பாட்டில் வளர்ந்த தமிழர்கள் இன்று அந்நியர்களாக வாழ்கின்றனர். தமிழன் நிலை இதுவா? தமிழர் பண்பாடு இதுவா? தமிழர்களே சிந்தியுங்கள் நன்றாகச்சிந்தித்துப்பாருங்கள் தமிழன் தமிழனாகத் தமிழ்ப்பண்பாட்டுடன் பண்டு போல் இன்றும் வாழ்ந்தால் தமிழன் இன்று ஒதுக்கப்பட வேண்டிய நிலையெய்தியிருக்க முடியாது. வீரஞ் செறிந்தவன் தமிழன். பண்புகள் படைத்தவனும் தமிழன். நீதியொடு நெறி பிறழாதரசு புரிந்தவனும் தமிழன். இத்துணை மேம்பாடுடைய தமிழனது நிலை இன்று தாழ்ந்த நிலையெய்தவும் ஒதுக்கப்படவும் வேண்டிய நிலைமையெய்தியது தமிழகஞ் செய்த தவக் குறைவாலேயாகும். தமிழன் தமிழனாகத் தன் மானத்துடன் வாழவேண்டுமானல் தமிழர்கள் எல்லோரும் ஒன்றுபட்டமனத்தினராய் ஒத்துழைக்க வேண்டும். "ஒற்றுமையே பலம்" "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" ஒற்றுமையாலேதான் வெற்றியீட்டலாமேயன்றித் தமிழர்களிடையே வேற்றுமை துவேஷமனப்பான்மை வேரூன்றினல் ஒருபோதும் தமிழர் நிலை உயர்ச்சியடைய மாட்டாது. தலை நிமிர்ந்து நின்று தன்மானத்துடன் தமிழன் வாழவும் இயலாது. "தமிழனென்றுசொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்று தமிழர்களைத் தட்டியெழுப்பித் தமிழனென்ற உணர்ச்சியூட்டித் தமிழைத் தனியுயர்மொழியாக்கித் தமிழே பேச்சாகவும், மூச்சாகவும் உணர்வாகவும், உயிராகவும் வாழ்ந்த அமரகவி பாரதியாரின் அரிய பாடலுணர்ச்சி ஒவ்வொரு தமிழன் இரத்தத்திலுங் கலந்து ஓடவேண்டும். பேச்சளவில தமிழனாகவும், செயலில் அந்நியனாகவுமே இன்றைய தமிழர்கள் காணப்படுகின்றனர். தமிழர் பண்பாடு இதுவல்ல. சொல்லுஞ் செயலும் ஒன்றுபட்டதே தமிழன் பண்பு. சொல்லும் செயலும் ஒன்றுபட்டு நின்று உயரிய நெறியில் வெற்றியீட்டுவதே உண்மையான பண்பு. குமரி தொட்டு இமயமீறாகப் பரம்பரை பரம்பரையாக அதிகார பீடத்திலிருந்து ஆட்சிபுரிந்துவந்த தமிழை, சங்கமிருந்து வடித்தெடுத்த தீந் தமிழை இன்று பின்னணியிற் புறம் போக்கிவிட்டது தமிழ்ப்பேடிகளின் பிளவுபட்ட தன்மையாலேயேயாம். தமிழர்நிலை இன்று எவ்வளவு தூரம் தாழ்த்தப்பட்டுவிட்டது என்பதைக் கண்ணாரக் கண்டும் தமிழர் வாளாவிருப்பது தமிழன் பண்பாகுமா? தன் தேசத்திற்காகத் தன் தாய் மொழிக்காக உண்மையிலுழைக்காதவனொருவனும் தமிழனென்று கூறுவதற்கே அருகதை பூண்டவனல்லன்.

போப் என்னும் ஆங்கில அறிஞர் தானிறக்கும்பொழுது தமிழ் மாணவனாகவே இறக்க விரும்புகிறேனென்று கூறினர் அந்நியர்கட்கே தமிழர் பண்பாடு மனரம்மியத்தைக் கொடுத்திருக்கின்றதென்றால் தன்னிகரில்லாத் தமிழர் பெருமை தமிழின் பெருமை எத்துணை சாலச்சிறந்தது என்பதைத் தமிழர்கள் பண்பற்ற பதர்களாகாது சிந்தித்துப் பார்க்கவேண்டியது. தமிழர்களே! இனிமேலாவது உறக்கத்தினின்றும் விழியுங்கள்; தமிழினத்திற்காகவும் தமிழ்மொழிக்காகவும் உங்களைத்தியாகஞ் செய்யுங்கள்.

"நிலையிற்பிரியேல்"என்ற ஒளவைக்கிழவியின் அமுதமொழியை ஒவ்வொரு தமிழனும் உணர்விலிருத்தி உன்னத பண்பாட்டுடன் தமிழிற்கும் தமிழ் நாட்டிற்கும் தமிழினத்துக்கும் சேவை செய்யவேண்டும். இன்றைய தமிழர்களிடத்தில் நிலையான உறுதியைக் காண முடியாது. பட்டம், பதவி வேட்டைகளே நிலையான அங்கம் வகிக்கின்றன. தமிழர்கள் தங்கள் உயரிய நிலையை விட்டுக் கீழே வந்தமைதான் இன்றுள்ள அவல நிலைக்குக் காரணம். நம் சமயாசாரியருள் ஒருவராகிய திருநாவுக்கரசரின் 'நாமார்க்குங் குடியல்லோரும்....' என்ற தீந் தமிழ்த் தேவாரந்தானும் இன்றைய அடிமைப் பண்பு குடிகொண்ட தமிழர்களின் இதயத்தை எட்டவில்லையா? இடம் பெறவில்லையா? எக்காலத்திலும் எவ்விடத்திலும் அடிமையற்றவன் தமிழன் என்ற உணர்ச்சியை ஊட்டவில்லையா? நம் சமயாசாரியர்களும் பழந்தமிழ்ப்புலவர் பெருமக்களும் முனிவர்களும் தமிழ் நாட்டிற்காகவும் தமிழினத்திற்காகவும் தமிழ் மொழிக்காகவும் திரிகரண ஒருமைப்பாட்டுடன் வாழ்நாள் முழுதும் உழைத்தனர். தங்கள் வாழ்க்கையையே தியாகஞ் செய்தனர் என்பது எவரும் மறுக்கொணு உண்மை. 'அச்சமென்பது அறியாமை' பண்டைத் தமிழர் அச்சமென்பதையறியார்கள். ஏனெனில் அவர்கள் நீதியற்ற, நேர்மையற்ற எவ்வித கொள்கைகளையும் ஆதரிக்கவுமில்லை. சீர்கேடான வழிகளில் தங்கள் வாழ்க்கையைச் செலுத்தவுமில்லை. அதனல் அவர்கள் ஆண்மையுள்ளவர்களாகவும் ஆத்மஞானமுள்ளவர்களாகவும், எக்காரியத்திலும் வெற்றிமுரசு கொட்டுபவர்களாகவு மிருந்தனர். இவைகளெல்லாவற்றிற்கும் அவர்களிடம் காணப்பட்ட பிரதான காரணமென்னவெனில் எந்தவாழ்க்கையுடனும் சமயத்தைப் பிரதானமாக இணைத்து வாழ்ந்தமைதான். சமயம்தான் மக்கள்வாழ்க்கையை வாழ்வாங்கு வாழச் செய்வது. மக்களை மக்களாக உருவாக்குவது. சமயமில்லா எந்த உயரிய வாழ்க்கைதானும் உண்மையான இன்பமான அமைதியான வாழ்க்கையாக மாட்டாது. சமயமற்ற வாழ்க்கை உப்பில்லாப் பண்டம்போலச் சப்பென்றிருப்பதுடன், சுக்கானில்லாப் படகுபோலவும், திசையறியா மீகாமனைப் போலவும் வாழ்க்கையைத் தத்தளிக்கச் செய்யும். இன்று பெரும்பான்மையாகத் தமிழர்களிடையேஅதிலும் இன்றைய இளைஞர்களிடையே சமயக் கொள்கை, எண்ணமென்பது அற்பமேனுமில்லையென்றே சொல்ல வேண்டும்; இவை இருந்திருக்குமானல் இன்று தமிழர்களிடையே பிளவுபட்ட தன்மைகளும் துவேஷ மனப்பான்மைகளும் அந்நியக் கொள்கைகளும், பண்பாடுகளும் அமோகமாகத்தாண்டவமாடா. தன் தன் சொந்தப் பரம்பரையான கலாச்சாரங்களையும் கொள்கைகளையும் அகற்றிவிட்டு அந்நியப் பண்பாடுகளையும் கொள்கைகளையும் எவர்கள் மேற்கொள்ளுகின்றார்களோ அவர்கள் உண்மைத் தமிழர்களல்ல. போலித் தமிழர்களாவர், தமிழ் மொழியிலேதான் முதன்முதலில் மக்கள் வாழ்க்கைக்குரிய ஒழுக்கலாறுகள், பண்பாடுகள் உண்டாயின, "யாதுமூரே யாவருங் கேளிர்" என்ற துவேஷமற்ற ஒப்பற்ற, அன்புருவான சகோதரத்துவப் பண்பாடு இன்றைக்குப் பல்லாயிரமாண்டுகட்கு முன்னதாகவே தமிழர்களிடையே தமிழ்மொழியிலிருந்துதான் உருப்பெற்றது. இப்பண்பு சிறப்பாகத் தமிழர்கட்கும் தமிழ் மொழிக்குமே யுண்டு தமிழர் பண்பாடு அன்று அப்படியிருந்தது. இன்று தமிழ்மொழியின்நிலை ஒதுக்கப்பட்டுவிட்டது. இது யார் தற்குறைவு. தமிழரின் தவிர்க்கொணுத் தற்குறைவு. தமிழர்கள் தமிழர்களாக தமிழ்ப் பண்பாட்டுடன் தன் மானத்துடன் தன்பரம்பரையுடன் வாழ்ந்தால் இன்று தமிழர்நிலை அவலமுற, ஒதுக்கப்பட வேண்டிய நிலையையடைய ஒருபோதும் வேண்டியதில்லையென்று திடமாகக் கூறலாம். இனித் தமிழர்களினதும் இன்பத் தமிழினதும் மிகப் பெரிய இன்னுமொரு சிறப்பு என்னவென்றால் எக்காலத்துக்கும் எச்சமயத்தவர்கட்கும் தகுந்த ஏற்றுக்கொள்ளக் கூடிய நீதிநூல்களைப் பெருமக்கள் இயற்றி வைத்துப் போந்தமையாகும். இத்தகைய சிறப்பு பொதுவாக மற்றெந்தச் சாகியத்தார்க்கும், மொழிக்கும் இல்லையென்றே சொல்லலாம். பரமசிவனுடனும் சொற்போர் புரிந்த தமிழன் இன்று எதிர்த்து நின்று வெற்றியீட்ட இயலாது பதடிகட்குப், பண்பற்றவர்கட்குத் தன்னுரிமையைத் தாரைவார்த்தழிக்கப்போகின்றனே? தமிழன் அப்படிக் கையழிப்பது தமிழினத்திற்கு மாண்பாகுமா? தமிழர்களின் தமிழ் மொழியின் மாண்பெங்கே? தமிழர்களின் பண்டைவீரமெங்கே?போர்த்திறமெங்கே? போர்முறையெங்கே? தமிழர்களின் எதிர்காலமென்னே? தமிழர்களே! ஆழமாகவும் அறிவுடனும் சிந்தியுங்கள். தமிழினமும் தமிழ்மொழியும் பண்டுபோலின்றும், என்றும் உயர்ச்சியடையவும், தலைநிமிர்ந்து நிலவப் பெறவும் ஒருங்குசேர்ந்து ஆவன செய்யுங்கள். மிருகத்தனமான மேல்நாட்டு விஞ்

தொடர்ச்சி 4 ம் பக்கம்

எழுதியவர்
செல்வி: த. மாலோகமணி

# பண்டாரநாயகாவின் வெற்றி

## வெளிநாடுகளில் கருத்து வேறுபாடு

திரு. பண்டாரநாயகவின் வெற்றிபற்றி அதிகாரபூர்வமான கருத்துக்கள் வெளிவந்திலவேயெனினும் வெளிநாடுகளுட் சில அவருடைய வெற்றிபற்றி வருந்துவதாகவும் சில வெற்றியை வரவேற்பதாகவும் கருதப்படுகின்றது.

இலங்கை இந்திய பிரசா உரிமை விஷயத்தில் திரு. பண்டாரநாயகவின்கருத்து பிரசா உரிமை வழங்குவதை எதிர்ப்பதாகவே கருதப்பட்டு வந்தது. ஆனல் அவர் அவ் விஷயத்தை நீதியாகக் கையாளுவாரென்றும் வெளிநாட்டுக்கொள்கையில் இந்தியாவுடன் ஒத்த கொள்கையினராவாரென்றும் இந்தியாவிற் கருதப்படுவதனல் அவருடைய வெற்றி இந்தியாவில் வரவேற்கப்படுகின்றதாம்.

மேல்நாட்டுக் கொள்கைகளுக்கு முரண்பாடானது. பொதுவுடைமையினருக்கு ஒருவாறு சாதகமாயுள்ளது என்பது "நியுயோர்க் டைம்ஸ்"என்னும் அமெரிக்கப் பத்திரிகையின் கருத்தாயறிய வருகின்றது.

சேர். அன்தொனி ஈடனுடன் ஒக்ஸ்போர்ட்டில் கல்விபயின்ற ஸ்ரீ பண்டாரநாயக தாம் சொல்லும் சொற்களைப்போல் நிலையாயகத்திடமாய் நிற்பாரென்று கருதமுடியாது. அவர் ஸ்ரீ நேருவைப்போல் நடுநிலைமைக் கொள்கை பேசுவதாகத்தோன்றுகின்றது. ஆனல் மந்திரியாயிருந்த அனுபவமுடையவராயிருப்பதாலே புத்திசாலியாகச் செயலாற்றக்கூடுமென்று நம்பலாம் என்பது "சிட்னி மோர்னிங் ஹெரால்ட்" என்னும் அவுஸ்திரேலிய பத்திரிகையின் கருத்தாம்.

பிரித்தானிய சம இராச்சிய இணைப்பின் உறுப்பினராயமையும் நாட்டினர் இலங்கைத் தேர்தல் முடிவு பற்றி வருந்த வேண்டிய நியாயம் உள்ளது என்பது "தடொமினியன்" என்னும் நியுசிலந்துப் பத்திரிகையின் கருத்தாகும்.

திரு. பண்டாரநாயகவின் தேர்தல் வாக்குறுதிகள் செயலிற் கொண்டு வரப்படுமானல் பிரித்தானியாவுக்கு அது ஆபத்தானதாயிருக்கும். இலங்கைக்கு அதிலும் கூடிய ஆபத்தாயிருக்கும் என்பது "டெயிலி மெயில்" என்னும் ஆங்கில பத்திரிகையின் கருத்து.

இலங்கைச் சுதந்திர ஆட்
சியின் முதல் எட்டு வ
டத்தில் எடுத்துக் காட்ட
கச் சொல்லக்கூடியமுறை
யிற் பொருளாதாரத்துறை
யிலும் அரசியற் றுறை
லும் பிரித்தானியாவுட
தாராளமான நட்பு முறை
யில் இலங்கை ஒத்துழை
திருக்கின்றது. இப்பெ
ழுது நிச்சயமாகச் சொ
லக்கூடாதமுறையில் வே
பாடுகள் இடைஞ்சல்க
டன் நிலைமை மாறியிரு
கின்றது என்று "டெயி
ரெலிகிறுப்" என்னும் ஆ
கிலப் பத்திரிகை கூறுகி
றது.

குவாலாலம்பூரில் சே
கிளப் துரைசிங்கம் இல
கைத்தேர்தல்முடிவுபற்றி
தமது கருத்தைச் சொ
லும்போது திரு. பண்ட
ரநாயகவின் வெற்றியை
பற்றி மலாயாவிலுள்
இலங்கை மக்கள் எவ்வா
றும் அஞ்சவேண்டி
தில்லை. அவர் பொது
டைமையினரல்லர். தெ
ந்த சிந்தையுள்ளவர். அ
ரை யாவரும் ஆதரி
வேண்டும் என்று கூறின

# நாடு நலம்பெற உழைத்த நற்றவத் தொண்டர்

---0---

## மேன்மைகொள் சைவநீதி விளங்கவைத்த பாரம்பரியம்

[முற்றொடர்]

துறவறம் பூண்ட சந்நியாசிகள் பெரும்பாலும் தாம் செய்யும் ஆன்மார்த்த வழியிலேயே முயற்சி செய்வார்கள், இம்மாதவச் செல்வரும் தமது ஆத்மீக நிலைக்கேற்ப, தமது தாய் நாட்டு மக்கள் கடைத்தேற வேண்டும் என்னும் அவாவுடையவராயிருந்தார்கள், சமய குரவர்களைப்போல உலகத்தோடல்லாமல், பார்த்தும் பாராமல் இருந்தும் சைவத்திற்குத் தொண்டாற்றினர்கள். அத்தொண்டுகளை இங்கே காட்டுதும்.

1 அடிகளார் சூரியனார் கோயிலாதீனத்தில் இருக்கும் காலத்தில் அவ்வாதீனகர்த்தரும் தமது குரவருமாகிய ஸ்ரீலஸ்ரீ முத்துக்குமாரதேசிக சுவாமிகள் கருத்தின்படிமுன்னெருபோதும் வெளிவராத "சிவஞான போதமாபாடியம்" முழுவதும் வெளிவருவதற்குக் காரணமாய் இருந்தார்கள்.

2 ஆதீன தாபகராகிய ஸ்ரீலஸ்ரீ சிவாக்கிரக யோகிகள் அருளிச்செய்த சிவாக்கிரகபாடியம், கிரியா தீபிகை என்னும் இரு வடமொழி நூல்களையும் வெளியிட்டு உபகரித்தார்கள்,

3 சுவாமிகள் சிதம்பரத்தில் இருக்கும் காலத்தில் யாழ்ப்பாணம் காசிவாசி ஸ்ரீலஸ்ரீ செந்திநாத சுவாமிகள் எழுதிய "தத்துவ விளக்கம்" என்னும் நூலுக்கு எழுதிய உரையை ஒத்துப் பார்ப்பதற்காகத் தாம் எழுதி வைத்திருந்த பிரதியையும் செந்திநாதசுவாமிகளுக்குக் கொடுத்துதவினர்கள்.

4 செப்பறை ஸ்வாமிகள் எழுதி வைத்த "தோடுடைய செவியன்" என்ற தேவாரத்திருப்பதிக உரை சுவாமிகளால் பரிசோதிக்கப் பெற்றபின்பே தருமபுராதீனம் வெளியிட்டது.

5 திருவுந்தியார் திருக்களிற்றுப்படியார் இருநூல்களுக்கும் உரை எழுதி வைத்தார்கள். அவை இப்போது சுவாமிகளின் சீடர்களால் அச்சு வாகனமேறி வெளிவந்திருக்கின்றன.

6 கோவைகிழார் சி. கே. சுப்பிரமணியமுதலியாரவர்கள் எழுதிய பெரிய புராண உரை சுவாமிகள் வசமிருந்து அவர்கள் சரிபார்த்தபின்னரே வெளியிடப்பட்டது.

7 தருமபுராதீனம்24-வது மகாசந்நிதானம் ஆணைப்படி "முத்திநிச்சயப் பேருரை" முழுவதும் ஒப்பிட்டுப் பார்த்து உபகரித்தார்கள்.

8 ஷை ஆதீனம் 25-வது மகாசந்நிதானம் அவர்கள் விரும்பியபடி "ஞானவாண விளக்கம்" பெரும்பகுதி சரி பார்த்தவர்கள். இந்த வகையில் இப்போது இம்மகானைப் போல் ஒருவரைக் காண்பதற்கு தமிழ் நாடு தவம் செய்யவேண்டும்.

9 இன்னும் சைவத்தையும் தமிழையும் வளர்ப்பதற்குத் தமக்குத் திருவருளாற் கிடைத்த நாலாயிரரூபாவையும் மூலநிதியாகக் கொண்டு சிதம்பரம் மாலைகட்டித் தெருவில் ஒரு திருமடத்தையும் தமது ஆசிரியர் பேரில் ஒரு நூல் நிலையத்தையும் நிறுவினர். அவை எக்காலமும் நடைபெறக்கூடிய நிபந்தமும்

எழுதியவர் :

செ. கோவிந்தசாமி அவர்கள்

ஏற்படுத்தியுள்ளார்கள். இதனைச் செய்யும்பொழுது தமது உறவினரையும் வைத்தே செய்தனரென்ப!

10 தாமிருந்த ஆச்சிரம நூல்நிலையத்தில் பல ஞான நூல்களை வைத்து இவ்விடத்திற்கும் ஏற்பாடுகள் செய்தனர்.

பின் வடமொழி வேத சிவாகமங்களுக்கும் உரை கண்டு தமிழில் எழுதிவெளியிடுவதற்கு முயற்சித்தார்கள். அந்த முயற்சி கைகூடவில்லை. அது சைவம் செய்த தவக்குறைவு போலும்.

சுவாமிகள் சிதம்பரத்தில் இருக்கும்பொழுது இந்தியாவில் உள்ளவர்களும், யாழ்ப்பாண நாவலர் அன்பர்களும் தரிசனம் செய்து அவர் அன்பையும் ஆசியையும் பெற்றுக்கொண்டனர். அங்ஙனம்யாழ்ப்பாணத்திலிருந்துசென்ற சைவப் பெரியாரும் பேராசிரியதிலகருமாகிய ஸ்ரீமத்சிவபாதசுந்தரனரவர்கள் தலயாத்திரைசெய்யச் சென்றகாலை இத்தவச்செல்வரின் ஆச்சிரமவாசத்தை விரும்பி அங்குச்சென்றனர். அவர் இச்சைவப் பெரியாரை நன்கு உபசரித்துத் தமது ஆச்சிரமத்தில் தங்கச் செய்தனர். சிலநாள் அங்கிருந்து சுவாமிகளோடு அளவளாவி அன்புரிமை பூண்டு தமக்கிருந்த சந்தேகங்களையும் சுவாமிகள்பாற் கேட்டுத் தெளிந்தனரென்ப.

இன்னும் சி. கே. சுப்பிரமணிய முதலியாரும் சிவஞான போதத்திற்குப் பொருள்கேட்டுத் தெளிந்தனர். முதலியார் அவர்கள் சுவாமிகளிடம் படிக்கும் காலத்திற்றான் தெல்லிப்பழை சைவப் பிரசாரகர் திரு. பொ. கருணாகரர் அவர்களும் சுவாமிகளிடம் சென்று சித்தாந்த விடயங்களிலேதமக்கிருந்த சந்தேகங்களைக் கேட்டுத் தெளிந்தனர். அதுவுமன்றிச் சுவாமிகள் தருமபுராதீன மடத்திற்குச் செல்லும்போது கருணாகரரையும் உடன் கூட்டிச்சென்று அங்குள்ள தம்பிரான் சுவாமிகளுக்கு அறிமுகப்படுத்தியும் வைத்தனர். யாழ்ப்பாணம் வண்ணை திரு. மு. சித. ப. மு. சிதம்பரநாதச் செட்டியார்,திரு. ம. வே.திருஞானசம்பந்தப்பிள்ளை முதலானோரும் சுவாமிகளைத் தரிசித்து அவர் அன்பையும் ஆசியையும் பெற்றனரென்ப.

சுவாமிகள் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பெருந்தகையிடத்தில் மரணபரியந்தம் நன்றிமறவாக்கடப்பாடுடையவராக இருந்தவர்கள். அவர் மேல் அபிமானம் வைத்தவர்கள் பக்திபூண்டவர்கள்.

---

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில்

## புதுவருடக் கொண்டாட்டமும் சைவப் பிரசங்கமும்

துன்முகி வருடம் முதலாம் திகதி 13-4-56 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் புதுவருடக் கொண்டாட்டம் நடைபெற்றது. சிறைச்சாலைக் கோயில் மிகவும் அழகாக அலங்கரிக்கப்பெற்றிருந்தது. பகல் 11 மணியளவில் கடவுள் ஆராதனை செய்யப் பெற்று சிவபுராணம் ஓதப்பெற்றது. யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரால் 125 சைவமறியற்காரருக்கு தேநீர் விருந்தளிக்கப் பெற்றது. பின்பு திரு. பொன் அப்புக்குட்டி அவர்கள் தலைமையில் கூட்டம் ஆரம்பமாயது. சைவப் பிரசாரகர் திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்கள் "அழுக்குப்போக்கல்" என்னும் விடத்தைப் பீடிகையாகக் கொண்டு ஓர் சிறந்த சைவப் பிரசங்கஞ் செய்தார். பேசும்போது மலநீக்கமும் சிவப் பேறும் பெறவே உடம்பு நமக்குக் கடவுளால் கொடுக்கப்பட்டது என்று அநேக சிறு கதைகள் மூலமாகச் சைவசித்தாந்தக் கருத்துக்களை எல்லாம் விளக்கியும் மறியல்வீடு கடவுள் வழிபாட்டுக்கு உகந்த இடமென்றும், வேறு காம வெகுளி மயக்கங்கள் இங்கே வருத்தாதென்றும் கூறினர். தலைவர் அவர்கள் கடவுள் வணக்கமே மலம் கழுவுதல் என்றும் மணிவாசகர் 'தங்கள் மலங்கழுவுவார் வந்து சார்தலினல்" என்று எடுத்து விளக்கியுள்ளார் என்றும் ஞானசம்பந்தன் "பிறப்பில் பெருமானைப் பின்றாழ் சடையானை மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே" என்று பாடியுள்ளார் என்றும் எடுத்துக் காட்டி கடவுள் வணக்கம் இன்றி நாம் கடைத்தேற வேறு வழியில்லை என்று குறிப்பிட்டார்.

---

## சொல்லும் செயலும் தொடர்ந்திருப்பதே தமிழ்ப் பண்பாடு

3-ம் பக்கத் தொடர்ச்சி

ஞான சக்தியை நம்பியிராது அகிம்சைமுறையைக் கைக்கொண்டு ஆத்மசக்தி பூண்டு உயரிய நெறியில் உன்னதமான கொள்கையோடு ஆத்ம ஞானத்தால் தமிழினம் தமிழ்மொழி அவலம் நீங்குமாறு உழைக்க வேண்டும். அதுவே சீரிய நெறி.

தமிழர்களே! போலியுறக்கங் கொள்ளாதீர்கள். போலியுறக்கந்தான் இன்றைய தமிழர்கள் கொள்வது. உண்மையுறக்கங் கொள்பவனை விரைவிலெழுப்பலாம். தமிழர்கள் உறக்கத்தினின்றும் விழித்தெழுந்தவர்களாக இருந்தால் இதுவரையில் தமிழர் நிலை,மொழியின்நிலை அவல நிலையடையமுடியாது. தமிழர்கள் இனிமேலும் போலியுறக்கங் கொள்வது தகாது. பாம்பாட்டியின் ஆடு பாம்புபோலவும், சூத்திரப் பாவை போலும் தமிழர்கள் வாழ்வது தமிழன் நிலைக்கு இழிவு என்பதைத் தமிழர்கள்உணர்வார்களா? உணர்ந்தால் தமிழரின் இதயந் துடியாதா? மானத்துடன் வாழ்ந்த தமிழன் இன்று அவமானமுறுவது முறையா? ஒவ்வொரு தமிழனிடமும் உண்மையான ஒளி வீசுவதாக இருந்தால் எவரும் தமிழர்களைத், தமிழகத்தைத்,தமிழ்மொழியை அடிமையாக்கவோ ஆட்சி செலுத்தவோ ஒருபோதும் முடியாது. "தேசாபிமானமும் சாதியபிமானமும் பாஷாபிமானமும் ஒரு தேசத் தொண்டுதான்" என்று காந்தியடிகளே கூறினர். தமிழர்களே! மனிதப் பிறவியின் பயனை தமிழர்களாகப் பிறந்ததின் தவப்பயனையடைய ஆவலுடன் தமிழ்த் தொண்டாற்றுங்கள். உண்மைச் சக்தியைத் தமிழன் சீரிய வழிகளில் பாவிப்பானகை இருந்தால் ஒரு தமிழனைப் பிறர் எத்தனைபேர் எதிர்த்துநின்றாலும் வெல்ல முடியாது. இன்று தமிழன் சக்தியை விட்டுவிட்டான். மானத்தை மறந்துவிட்டான். தாய்மையைத் துறந்துவிட்டான். அன்பை அழித்துவிட்டான். ஆண்மையை அகற்றிவிட்டான். சொந்தக் கலை கலாச்சாரங்களைக் கழற்றிவிட்டான். இவைகளே இன்றைய தமிழர்களின் தாழ்ந்த நிலைக்குக் காரணம். அவல நிலைக்கு ஆணிவேர். நாம் அடிமை வாழ்வு வாழவும் வேண்டிய நிலையெய்திவிட்டதே. அந்தோ! கொடிது!! கொடிது!!! இறைவனே சங்கத்திலிருந்து ஆராய்ந்த நம் தமிழை நவில்தொறும் நவில்தொறும் சுவை பயக்கும்தேனினுமினிய இன்பத் தமிழை, சங்கமிருந்துவடித்தெடுத்த தீந்தமிழை என்றும் இளமை குன்றாக் கன்னித் தமிழை வருவோரெல்லோரையும் இன்முகங் கொண்டு வரவேற்று உபசரிக்கும் பண்பு பூண்ட வாழ்க்கை முறையுடைய தமிழர்களை இன்று பிறர் அடிமைப்படுத்தி உரிமையற்ற அரசியலனுதைகளாக்கி அவஸ்தைப்படுத்தி எடுப்பார் கைப்பிள்ளையாக இரந்திரந்து வாழ வைப்பதைத் தமிழர்களே! நீங்கள் அறியாமலிருக்கிறீர்களா?

பிற்காலச் சந்ததியினரின் நல்வாழ்வு கருதித் தமிழர்களே அல்லும் பகலும் சொல்லுஞ் செயலும் ஒன்றுபட்டு நற்பண்புகளைக் கடைப்பிடித்து தமிழகத்திற்கு, தமிழினத்திற்கு தமிழ் மொழிக்கு இன்று வேண்டிய சேவைசெய்யுங்கள். இது தமிழ் மக்கள் ஒவ்வொருவரினதும் கடமையாகும்.

"எண்ணிய எண்ணியாங் கெய்துவர்
எண்ணியர் திண்ணிய ராகப் பெறின்".

---

### தமிழ்மொழி விகாரப்படாத காரணம்

ஸ்ரீ சி.இராசகோபாலாச்சாரியார் அவர்கள் சென்னையில் திரு. டி கே. சிதம்பரநாத முதலியார் அவர்களின் உருவப்படத்தைத் திறந்து வைத்துப்பேசும்போது சுமார் 2000 ஆண்டுகளாகத் தமிழ் எழுத்துக்களில் மாறுதல் உண்டாகவில்லை. தமிழ் மொழியில் நான் கண்ட சிறந்த அம்சங்களில் இதுவும் ஒன்று. கிரேக்கையும் இலத்தீனையும் போலாகாது காலத்தின் மாறுதல்களையெல்லாம் தமிழ்மொழி சமாளிப்பதற்கு இதுவே காரணமாகும். கிரேக்க இலத்தீன் மொழிகள் காலத்தின் போக்கிற் கேற்பப் பல மாறுதல்களடைந்தன. சில ஆண்டுகளுக்கு முன்பு பேசப்பட்ட கிரேக்க மொழியும் எழுதப்பட்ட கிரேக்க மொழியும் வேறு வேருயிருந்தன என்று கூறினர்.

---

காற்று வீசுகின்றது

# மாற்றப் பாதையிலே

### கல்வி மந்திரியாரின் கடுகதி ஊக்கம்

சித்திரை 24-ல் ஆரம்பித்த ஆசிரிய தராதரப் பத்திரத் தேர்வில் வினாக்கள் குறிப்பிட்ட நாழிகைக்கு முன்பே வெளியாயினவென்பதை உடனடியாக விசாரித்துக் கல்வி மந்திரியார் அத் தேர்வைத் தொடர்ந்து நடத்தாத வண்ணம் நிறுத்தியிருக்கின்றார்.

இந்த விதமான வினாக்கள் வெளிவருவதைப்பற்றி விசாரணை செய்ய அதிகாரக் குழுவினரை நியமிக்கும் முறையிலே ஆலோசனை நடைபெறுகின்றது. முன்னாள் நீதியரசர் திரு செ. நாகலிங்கம் இந்த விசாரணையை நடத்தலாம் என்று கூறப்படுகின்றது.

### முசுலீம் பாடசாலைகளிலே மொழிமாற்றமா?

அகில இலங்கைச் சோனகர் சங்கம் கல்வி மந்திரியாரைக் கண்டு முசுலீம் பாடசாலைகளிலே சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும்படி கேட்டுக்கொண்டதாயு மந்திரியார் அதற்கு இணங்கியிருப்பதாயும் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது.

### வைசாக மாதம் வசந்த காலமா?

அகப்பை பிடிப்பவன் தன் ஆள் ஆனால் அடிப்பந்தி என்ன நுனிப்பந்தி என்ன என்பது முதுமொழி மக்கள் ஆட்சியில் மனமகிழ்ச்சிக்குரியது விடுமுறை. அரசாங்க விடுமுறை காலம் கூடுதலாயிருக்கிறதென்று முன் புகார் செய்தவர்கள் இன்று அக்காலத்தை நீடிப்பதற்கு ஆயத்தஞ் செய்கின்றார்களாம்.

### மேற்கு நாட்டு முறையில்!

தொழிலாளர் தினம் வைகாசி முதலாம் நாள் என்பது மேற்கு நாட்டுமுறை. சுத்த இலங்கை மயமாகும் மக்கள் ஐக்கிய முன்னணிக்கு இந்த மேனாட்டு விளையாட்டில் விருப்பம் வந்து விட்டது. காலிமுக முன்றிலிலே ஒரு விழா. கொழும்பு மாநகர முன்றிலிலே இன்னொரு விழா எல்லாம் அரசாங்க அநுசரணையிலே என்றால் கல்வீச்சுக்கும் கண்ணாடி உடைத்தலுக்கும் இனி இடமிராது.

### திரிசிங்கள பெரமுனை-யின் புதுவேடம்

பொதுத் தேர்தலின்போது எங்கே போய்விட்டது என்று மக்கள் வியப்படைய மறைந்திருந்த திரிசிங்கள பெரமுனை இப்பொழுது திரு. பண்டாரநாயகவின் விடுதலைக் கட்சியிற்சேர உத்தேசித்திருக்கின்றதாம். வேறெந்தக் கட்சியுடன் சேரலாம் என்று கேட்க வேண்டுமா? உள்ளம் ஒன்று உடம்பு இரண்டாயிருந்து இப்பொழுது எல்லாம் ஒன்றாய்விட்ட செயலில் என்ன வியப்பிருக்கின்றது?

### பாற் சோற்றுடன் பத்திரிகை மாநாடு

கந்தவளையிலே கற்பகதரு விருந்தென்றார்கள். ஆனால் புதுப் பிரதமரின் மனையிலே பொதுசன உணவுக்குக் குறைவில்லை. பாற் சோறு போற் பயனுள்ளது வேறில்லையென்றாலும் அரிசி விலை குறைய அது சர்வ சாதாரணமாய் விடும் அல்லவா? எழுத்தாளர்களுக்கும் களைப் புத் தோற்றாது.

---

துன்ப முறவரினுஞ்
செய்க துணிவாற்றி
இன்பம் பயக்கும் வினை—

---

### வாழ்க்கை வானில்

—

2-ம் பக்கத் தொடர்ச்சி

யவும் இந்த அரசாங்கத்துக்கு ஆற்றல் இருக்கும் என்று சிலர் எண்ணுகின்றார்கள். ஆவணி வேலை நிறுத்தத்தின்போது துப்பாக்கிச் சூட்டுக்கிரையானவர்களுக்கும் இந்த அரசியற் பிரமாக்கள் வரங் கொடுப்பார்கள் போலும்!

### பழைய பிரதமர் டட்லியும் நுழைவாரா?

● யாரால் முன்னாள் முதல் அமைச்சர் டட்லி சேனநாயக பதவியிழக்க நேரிட்டதோ அவரும் அக்கதி அடைந்துவிட்டார் என்பதைச் சேர் கொத்தலாவலைக்கு நன்கு புலப்படுத்த திரு. டட்லியை மறுபடி பிரதமர் ஆக்குவார்களா? மக்கள் ஐக்கிய முன்னணியார்?

### வற்றாப்பளை அம்மனின் திருவுருவ ஊர்வலம்

—0—

முல்லைத்தீவுப் பகுதியில் வற்றாப்பளை என்னும் திவ்விய திருக்ஷேத்திரத்தில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ அம்பாளின் திருவுருவம் ஊர்வலமாக இவ்வாரம் திங்கட்கிழமை தொடக்கம் எழுந்தருளி யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள அன்பர்களுக்குத் தரிசனம் கொடுபட்டது.

திருவருளே திருவடிவமாக உள்ள தேவியின் ஆலயத் திருப்பணிக்கு அன்பர்கள் ஆவன புரிந்தனர்.

கலங்காது கண்ட
வினைக்கட் டுறங்காது
தூக்கங் கடிந்து செயல்—

---

## பத்திரிகை மகாநாட்டிற் பிரதமர்

—

2-ம் பக்கத் தொடர்ச்சி

இயற்றப்பட்ட அநேகம் முக்கியமான சட்டங்கள் சாதாரண அதிகப்படியான வாக்கைக்கொண்டு ஒதுக்கப்படக்கூடிய நிலைமையிலிருக்கின்றன.

சிங்களத்தை அரசாங்க பாஷையாக்கும் சட்டத்தை ஒருசாதாரண சட்டத்தைப் போலவே நான் கொண்டுவரத் தீர்மானித்திருக்கிறேன். அதற்குச் சபையில் மூன்றில் இரண்டு பங்கு அதிகப்படி வாக்குக் கிடைக்குமானால் இந்தச் சட்டத்தை அரசியலமைப்புச் சட்டத்தில் புகுத்தப்பட்ட ஒரு திருத்தம் மாதிரியே யிருக்கும்.

### அரசியலைத் திருத்தும் கேள்வி

அரசியல் திட்டத்தில் முக்கியமான பல திருத்தங்கள் செய்யப்படவிருக்கின்றன. அந்தத் திருத்தங்களை ஆராயும்போது சிங்களத்தை அரசாங்கபாஷையாக்கிய சட்டத்துக்கு அரசியல் திட்டத்தில் அங்கீகாரம் அளிக்கும் பிரச்னையும் ஆராயப்பட்டு தேவையான திருத்தம் அரசியல் திட்டத்தில் புகுத்தப்படும்.

பாஷைப் பிரச்னைக்கு ஒரு இறுதியான முடிவு ஏற்பட்டவுடன் பல்வேறு சமூகங்களுக்கிடையில் பழைய அந்நியோந்நிய உறவு மீண்டும் ஏற்படுமென்பது என்னுடைய நம்பிக்கை. வேலைகள் கொடுக்கும் விஷயத்தில் வகுப்பு அடிப்படையில் பாரபட்சம் காட்டப்படமாட்டாதென்றும் எல்லா வகுப்பினர்களுக்கும் சமநீதி வழங்கப்படுமென்றும் ஏற்கனவே சிம்மாசனப் பிரசங்கத்தில் கூறப்பட்டிருக்கிறது.

### தமிழ் மந்திரிகள் ஏன் இல்லை?

மந்திரி சபையில் தமிழ்த் தொகுதிகளின் பிரதிநிதிகள் ஒருவர்கூட இல்லாதது தமிழ் பேசும் மக்களுக்குக் கவலையையும் சந்தேகத்தையும் கொடுத்திருப்பதாக எடுத்துக் காட்டியபொழுது ஸ்ரீ பண்டாரநாயக கூறியதாவது:—

மந்திரிசபையில் ஒருவரைச் சேர்த்துக்கொள்ளுவதாயிருந்தால் அவர் அரசாங்கக் கொள்கையை ஆதரிப்பவராயிருக்கவேண்டும். இல்லாத பட்சத்தில் மாறுபட்ட அபிப்பிராயம் உடையவர்களை எப்படி மந்திரி சபையில் சேர்த்துக்கொள்ள முடியும்? தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு மந்திரிசபையில் இடமில்லாமற் போனதற்கு இதுவே காரணம்.

### சமஷ்டி அரசியலுக்கு எதிர்ப்பு

சமஷ்டிவாதிகளின் கோரிக்கையைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன என்று கேட்டபொழுது பிரதம மந்திரி ஸ்ரீ பண்டாரநாயக பின் வருமாறு தெரிவித்தார்.

சமஷ்டிக் கோரிக்கையை நான் பலமாக எதிர்க்கிறேன். மத்திய அரசாங்கத்தின் சமஷ்டி அரசியல் முறை ஏற்படுவது பொதுவாக நாட்டுக்கோ அல்லது சமஷ்டி அரசியலைக் கோரும் தமிழர்களுக்கோ யாருக்குமே நல்லதில்லை.

ஆனால் மத்திய அரசாங்க நிர்வாகப் பொறுப்பைக் கூடிய அளவு பிரித்து சுய ஆட்சி உள்ள மாகாண சபைகளையோ அல்லது ஸ்தல சபைகளையோ ஏற்படுத்த வேண்டுமென்று கூறப்பட்டால் அதேமாதிரியான யோசனையைக் கவனத்துக்கு எடுத்துக்கொள்ள நான் தயாராய் இருக்கிறேன்.

---

# உங்கள் நக்ஷத்திரம்? எங்கள் சோதிடர்

ஸ்ரீ ராதாகிருஷ்ணன் கணிப்பது.

[ இவ்வாரப் பலன்கள் 29—4—56 —— 5—5—56. ]

**மேடராசி** அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்.

தேகநிலை மாற்றந்தவிர ஏனையவற்றில் நல்லபேறுண்டாதல் நிச்சயம். முயற்சிகளைத் தொடரவும், ஆரம்பத்தில் வில்லங்கமுண்டானாலும் மனந்தளருதல் கூடாது வார இறுதியிற் பண இலதபத்துக்கிடமுண்டு.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசீரிடம், 1, 2-ம் பாதம்.

திங்கள் செவ்வாய் காலை கவனமாய் இருத்தல் வேண்டும். ஏனைய நாட்கள் நற்பலனளிக்கும். எனினும் மன அமைதி இருக்காது. நண்பர்களுடன் வாததத்தைத் தொடுத்தல் தவிர்க்கப்படல் வேண்டும். குடும்பக் கோளாறுக்குமிடம் இல்லாமலில்லை.

**மிதுனராசி** மிருகசீரிடம், 3, 4 திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3.

முதல் இருநாட்களும் புது அலுவலுக்குகந்தவை. ஆனால் செவ்வாய் மாலை புதன், வியாழன் தளப்பம் சிறிது ஏற்படும். வார இறுதி மறுபடி நன்மையாயிருக்கும்.

**கடகராசி** புனர்பூசம் 4ம் பாதம் பூசம் ஆயிலியம்.

இறுதி இரு நாட்களைத்தவிர ஏனையவை நற்பலனுள்ளவாயிருக்கும். சிறுச்சிறு சச்சரவுகளால் மனந்தளரக்கூடாது. தொடக்கத்திலே தடை யிருப்பினும் ஈற்றில் அநுகூலம் நிச்சயம். வாகனக் கடைசிநாட்கள் இரண்டும் சில தொந்தரவுகளை கொடுக்கக் கூடும்.

**சிங்கராசி** மகம், பூரம், உத்திரம் 1ம் பாதம்.

தாய்வழிச் சுற்றத்தவர்கள் சில தொந்தரவுகளைக் கொடுக்க இடமுண்டு. சில விபதுக்களும் நேரக்கூடும். நண்பர்களுடன் வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.

**கன்னிராசி** உத்திரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

பண நயத்துக்கு இவ்வாரத்தில் இடமுண்டு ஆனால் அது சம்பந்தமான பேச்சுக்களிற் கவனம் எடுத்தல் வேண்டும். நண்பர்களுக்குத் தேவையில்லாத வகையில் உதவிசெய்ய முற்படுதல் கூடாது. எதிரிகள் அபஜெயம் அடைவார்கள்.

**துலாம்** சித்திரை 3, 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்.

வசைக்கதை காவுவோராய் மனநிம்மதி கெடக்கூடும். புது முயற்சிகள் தாமதமாகும் இரகசிய எதிரிகளால் தொல்லைக்கிடமுண்டு. வார இறுதியிற் பண நயம் காணப்படும்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

விபரீத விளக்கங்கள் இவ்வாரத்திலே தெளிவாகிவிடும். எதிரிகள் தோற்பார்கள். புது வேலைகளில் நயத்துக்கு இடமுண்டு. கிருஷிகத்தால் இலாபமும் கிடைக்கக்கூடும்.

**தனுராசி** மூலம் பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

குடும்ப அமைதிக்கு இடமேயில்லை உத்தியோக முறையில் அநுகூலமும் நயமும் கிடைக்க இடமுண்டு. வார மத்தியிலிருந்து தேகநலம் சீரடையும்.

**மகரராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

குடும்பச் சூழலிலே சில விபரீத விளக்கந் தோற்றக்கூடும். எதையும் அவசரமாய் முடிவுசெய்தல் கூடாது. முன் செய்த ஏற்பாடுகளால் வில்லங்கங்களுக்குட் சிக்க வேண்டி வரும். எனினும் முடிவு வெற்றிகரமாயிருக்கும்.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்.

நன்மையான வாரம். புது அலுவல்களிலே அநுகூலத்துக்கிடமுண்டு. புதிதாகச் சிலர் பழக்கம் பிடிப்பார்கள். சமூக அநுகூலமும் கீர்த்தியும் காணப்படலாம்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

தந்தைவழிச் சுற்றத்தார் தொந்தரவு விளைவிக்கக்கூடும் எனினும் உத்தியோக முறையில் ஒரு நன்மையான வாரம். காணி பொருள் பண்டத்தால் இலாபத்துக்கிடமுண்டு.

### கோட்டு விற்பனவு விளம்பரம்

உரும்பராய் கிழக்கு
வீரசிங்கம் சத்தியானந்தம்
வழக்காளி.
இல. MB/39. எதிராக
யாழ்ப்பாணம்
சிவியாதெரு மேற்கு
1. தம்பையா செல்லப்பா கைம்பெண் அன்னப்பிள்ளை அல்லது அன்னபூரணமும்
2. செல்லப்பா அருளானந்தமும்
எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டின் MB/39-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1956ஹு ஆனிமீ 19உ செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

காணி விபரம்

வடமாகாண யாழ்ப்பாண டிஸ்றிக் சுண்டிக்குளி கோயிற்பற்று சிவியாதெரு இறை நறுவிலியடி மறுபிரிவும் நறுவிலியடி வளவும் பிரி இ. 16 இதில் மேற்குப்பக்கமாக பகி இல. 6. மிகுதிக்காணி 10 பரப்பும் கிழக்குப் பக்கத்தில் சிதனங் கொடுக்கப்பட்டது. மேலும் மொத்தமான பரப்பு 36 5/8 ல் வடக்குப்பக்கமாக கிந்தமாக உடையது 16 பரப்பு; இருந்தும் அந்தச் சொல்லப்பட்ட 36 5/8 பரப்பு எப்படிப்பட்ட தென்றால் ஒன்று 10½ மற்றது 16 பரப்பு; மற்றது 10 1/8 ஆனால் சொல்லப்பட்ட 6 பரப்பு பயிர் வகைகளும் கிணறு பங்கும் எல்லை கிழககு நாகலிங்கம் இராசாவுக்கும் பெண்சாதிக்குமுடைய வாதனங்கள், வடக்கு கொளும்புத்துறை தெண்டபாணி கோவிலுககுமுடைய வாதனமும், ரோட்டும் அதாவது ரோட்டு முந்தி ஒழுங்கையா யிருந்தது, மேற்கு சதாசிவம் பெண் பொன்னுவினுதனமும் மறுபேரும், தெற்கு சின்னவன் நாகமுத்தனின் மிகுதியான வாதனமும் மறுபேரும்.

இக்காணி D 226/385-ம் புத்தகத்தில் பதியப்பட்டிருக்கின்றது.

சே. இரத்தினசபாபதி,
கொமிஷனர்.
51, 4-ம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்
21-4-56.
M. 269 27 4 56. (து 200,

### வெந்தீஸ் விற்பனவு

—::—

அடைவு நகைகள்

யாழ்ப்பாணம் வண் - கிழக்கு கலட்டி 576/6 அம்மன் கோவில் ரோட்டில் அடைவு பிடிக்க உத்தரவு பெற்றிருக்கும் தா. சி. குமாரசாமி அன்ட் ஸ்ரீமதி. தா. சி. சோமசுந்தரம் அவர்களின் கடையில் 1954-ம் ஆண்டு ஐப்பசி மாதம் முதலாம் திகதி தொடக்கம் 1955 - ம் ஆண்டு பங்குனி மாதம் 31-ந் திகதிவரை அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாது தவறியிருக்கும் நகைகள் 1956-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ந் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

பொ. இராசரத்தினம்,
வெந்தீஸ் மேஸ்தர்.
M 268 2/-4, 4-5-56.

### உலக நீதிமன்ற அதிகாரத்துக்குட்பட்டதா?

இந்தியாவுக் கூடாகக் கோவாவுக்குப் போக்குவரத்துச் செய்வதற்கு இந்தியா இடங்கொடுக்க வேண்டும் என்று போர்த்துக்கேய அரசாங்கம் உலக நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்தது. இவ் விஷயம் உலக நீதிமன்ற அதிகாரதுக்குட்பட்ட தல்ல என்று இந்தியா ஆட்சேபிக்கின்றதாம்.

### பண்டிதநேரு அமெரிக்காவுக்குப் போகும் நாள்

பண்டிதநேரு அவர்கள் 7-7-56 காலையின் ஐக்கிய அமெரிக்க தலைநகரான வாஷிங்ரனை அடைவாராம். தலைநகரிலிருந்து தூரத்திலுள்ள நாட்டுப்புறத்தில் 10-7-56 வரையில் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஐசன்ஹோவருடன் பல விஷயங்களில் ஆலோசனை நடத்துவாராம். 10-7-56 பிற்பகல் அங்கிருந்து இலண்டன்மாநகருக்குப் புறப்படுவார்.

### திருக்குறட் தேர்வில் சித்தியெய்தியோர் விபரம்

1-ம் பக்கத்தொடர்ச்சி

துக்கல்லூா சாவகச்சேரி ச பாலசுப்பிரமணியம் சாவகச்சேரி சோ இரத்தினம்பாள், விவேகானந்த வித்தியாலயம் கொழும்பு ஆ தனலட்சுமி அ அ த க பாடசாலை K பன்னிலை; மு தனலட்சுமிதே சதானந்த வித்தியாசாலை அளவெட்டி சா பாலகிருஷ்ணன் கொழும்பு வி நித்தியானந்தன் சாவகச்சேரி ஆ சின்னப்மா சைவப்பிரகாச வித்தியாசாலை வரணி க பாலச்சந்திரன் கொட்டாஞ்சேனை கா ஆண்மேரி புஷ்பராணி நெடுந்தீவு ஐ யோகேஸ்வரி யாழ்ப்பாணம் ஆ சிவநேசச்செல்வன் தெல்லிப்பழை ஞா அன்ரன் யேசுதாசன் நெடுந்தீவு, வை வாலாம்பிகை, சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு-6 சி கோபால் காரைநகர் வ பொன்னபமா தெ வ மே மெ ளெவாலை மு திலகவதி சைவப்பிரகாச வித்தியாசாலை வரணி சு கலியோகவரதி மல்லாகம் ச ஜெகதீசுவரி சதானந்த வித்தியாசாலை அளவெட்டி பொ பிருதுவிதேவி வேலணை சு சிவகாமசுந்தரி சரசாலை து நாகபூசனி சித்திவிநாயக வித்தியாசாலை புங்குடுதீவு ந சகுந்தலாதேவி காரைநகர் செ அற்புதராணி சதானந்த வித்தியாசாலை அளவெட்டி நா சரசா அ த க பாடசாலை K பன்னிலை; மு சுத்தானந்தம் சங்கானை மு பாக்கியம் சாரதா வித்தியாலயம் தம்பலகமம் ச புனிதமலர் அ இ கல்லூரி நீர்வேலி.

## அகில இலங்கைத் திருக்குறட் போட்டி

பரிசு பெறுவோர் விபரம்:

தமிழ் மறைக் கழகம் நடத்திய அகில இலங்கை திருக்குறள் மனனப்போட்டியில் கலந்துகொண்டவர்களில் பின் வருவேர் பரிசுகள் பெறுகின்றனர். பரிசுகள் யாவும் வைகாசி மாதம் 24ந் தேதி யாழ்ப்பாணத்தில் நடைபெறும் திருக்குறள் மகாநாட்டில் வழங்கப்படும்.

பதக்கப் பரிசுகள்

மேற்பிரிவு: 1. திரு. ச. சுப்பிரமணியம் புத்தூர், 2 திரு. வெ. ஐயம்பிள்ளை காரைநகர், 3. திரு. க. குகதாசன் நம்புக் பிட்டியா.

மத்தியபிரிவு: 1. செல்வன் செ. சற்குருநாதன் வதிரி, 2. செல்வன் ஏ. எம. வேதநாயகம் கொழும்பு 3. செல்வி இ. சிவபாக்கியம், சைவப்பிரகாச வித்தியாசலை தெல்லிப்பழை.

கீழ்ப்பிரிவு: 1. செல்வன் க. தேவகாந்தன், 2 செல்வன் இ, தர்மலிங்கம் 3, செல்வி. பொ, இரத்தினபூபதி (இம்மூவரும சாவகச்சேரி இந்துக் கல்லூரி மாணுக்கர்கள்,)

புத்தகப் பரிசுகள்:

மேற்பிரிவு: திரு நா, ஆறுமுகர் தெல்லிப்பழை, செல்வி ச. சயமேரி அமலோற்பவம் நெடுந்திவு,

மத்திய பிரிவு செல்வி, சி. நாகபமா அளவெட்டிதெற்கு அளவெட்டி,

கீழ்ப் பிரிவு செல்வர்கள்; பொ, கந்தசாமி, இ ஜெகசோதி, செ தம்பிராசா, க. குமாரசாமி, செல்விகள். மு. உமையம்மை, ஆ. மனோன்மணி கா. தங்கமணி, கா. நவமணி, (இவர்கள் யாவரும் சாவகச்சேரி இந்துக்கல்லூரி மாணுக்கர்கள்.)

செல்விகள், சு, பாலகௌரி, வி மங்கையர்க்கரசி மு. உருக்குமணி (அருணோதயக் கல்லூரி அளவெட்டி)

செல்விகள் வே. விமலாதேவி, மு. இளையதங்கம், ந. பத்மராணி, (மெய்கண்டான் பாடசாலை இளவாலை).

செல்வன் ச. சிவபாதவிருதயர், இந்துக்கல்லூரி, கொழும்பு செல்வி அ. சாரதாமணி அளவெட்டி.

மிகக் குறைந்த வயதுடையவருக்குரிய பரிசு

செல்வி ஆ, விசயலட்சுமி ஹட்டன், (பிறந்த திகதி 22-5-48.

மிக அதிகமான மாணுக்கர்களைத் தேர்தலில் கலந்து கொள்ளச் செய்து பரிசுபெறும பாடசாலைகள்,

மத்தியபிரிவு, சைவமங்கையர் வித்தியாலயம் வெள்ளவத்தை; கீழ்ப் பிரிவு, இந்துக் கல்லூரி, சாவகச்சேரி.


# கம்பராமாயணம்

(யுத்தகாண்டம்)

குப்பகருணன் வதைப்படலம்
(ஒன்று முதல் 170 பாட்டுக்கள்)

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையின் வெளியீடு

பரமேசுவரக் கல்லூரித் தமிழ்விரிவுரையாளர்,
வித்துவான், பண்டிதர், சைவப்புலவர், க. வேந்தனார் அவர்கள் எழுதிய
விளக்கவுரையுடன் விரைவில் வெளி வரும்.

- ஒவ்வொரு பாட்டிற்கும், கொண்டு கூட்டு, பொருள், பொழிப்பு, விளக்கம், குறிப்பு எனும் உறுப்புகள் அமைய உரை எழுதப்பட்டுள்ளது.
- விளக்கத்தில் செய்யுள் நயம் விரிக்கப்படுகின்றது. செய்யுளை உணர்ந்து உணர்ந்து தீட்டிய உரை நயம் மாணவர்க்கு நல் விருந்தாகும்.
- உவமான உவமேய விளக்கம், மாணவர் உள்ளத்தில் பதியக் கூடிய முறையில் எழுதப்பட்டுள்ளது.

இத்துடன்,

170 பாட்டுக்களையும் அவற்றின் பொருள்நிலைக்கு ஏற்பப் பத்தொன்பது பிரிவுகளாக வகுத்து, அப் பிரிவுகள் ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தலையங்கங்கள் கொடுத்துப் பின் ஒவ்வொரு பிரிவுகளின் கீழ் உள்ள பாட்டுக்களின் பொருளையும் தொகுத்துத் தெளிவான உரைநடையில் எழுதப்பட்டுள்ளது. இதனல் மாணவர்கள் மிக எளிதாகப் பாட்டின் பொருளை விளங்கிக்கொள்வார்கள்.

மாணவர்கள் தாமாகவே படித்து, இலக்கியத்தை நயத்தற்கு வழிகாட்டும் வாய்ப்பான உரை.



# யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆ ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா
616313,00
100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்று 1ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப்பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானுல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்.

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்.

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாகோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிரூப்பர்.
Std. 14 20-11-46—20-11-49.


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன் துறை வீதி 450 ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில, யாழ்ப்பாணம் நாவலர்வீதி 245 ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. சுப்பையா பொன்னம்பலம் சர்மையா அவர்களால் 27.4.56 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.